1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 533. திரு. ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

533—

ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளிப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை.

* 9857—திரு. ஏ. டி. செல்லசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளி விளைச்சல் அதிகமாக உள்ளதால் இங்கு தக்காளி பதப்படுத்தவும், தக்காளிப் பழரசம் தயாரிக்கவும் தொழிற்சாலை ஏற்படுத்தி வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஒட்டன்சத்திரம் மார்க்கெட் தான் காய்கறி விற்பனையில் முதலிடத்தை வகிக்கிறது. அங்கேயிருந்து பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்றவை தினமும் சென்னைக்கும், கேரளா, பெங்களூர் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. தக்காளி போன்ற விரைவில் அழுகக்கூடிய காய்கறிகள் திடீரென்று மார்க்கெட் விலை இறக்கம் போன்றவைகளால், அல்லது வேலை நிறுத்தம், பந்த் போன்றவைகளால் பிரச்சினை ஏற்படும்போது, தக்காளிப் பழத்தைப் பாதுகாக்க முடியாமல் அதை தெருவிலே கொட்டிவிட்டு விவசாயிகள் அல்லல்படும் சூழ்நிலை பல்வேறு சமயங்களில் தொடர்ந்து ஏற்படுகிறது. எனவே விவசாயிகளின் மீது அக்கறைகொண்டு பல்வேறு சலுகைகளை அளித்துவருகிற புரட்சித் தலைவி அவர்களின் அரசு விவசாயிகளுடைய இந்த நீண்டகால பிரச்சினையை தீர்க்கும் வகையில் தக்காளி பதப்படுத்தும் மற்றும் பழரசம் தயாரிக்கும் நிலையத்தை அங்கே விரைவில் ஏற்படுத்த -ப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மான்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், நிலக்கோட்டை, நத்தம் ஆகிய பகுதிகளில் 38,940 டன்கள் வரை தக்காளி விளைச்சல் இருக்கிறது. தக்காளித் தூள், தக்காளிச் சாறு, தக்காளித் தொக்கு மற்றும் தக்காளிப் பொடி ஆகியவைகளை இதன்மூலம் தயாரிக்க தமிழகத்திலே 165-க்கு மேற்பட்ட தொழில் மையங்கள் உள்ளன.

திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளிப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அங்கே அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்றாலும் தக்காளிப் பழங்களை சில நாட்களுக்காவது கெட்டுப்போகாமல் இருக்கும் வண்ணம் பாதுகாக்கிற வகையில் குளிர்சாதனப் பெட்டியை அங்கே தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தர்மபுரி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பில் 10,000 டன் கொள்ளளவு கொண்ட பழங்கள் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத் துறையில் அமைப்பதற்கு உத்தேசித்துக் கொண்டு இருக்கிறது. இத்தொழில் கூடத்தில் தக்காளி பதப்படுத்தும் தொழிலும் சேர்க்கப்படவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 534, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

534—

சேலம் மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை மூலம் வழங்கப்பட்ட செடிகள்

* 16532—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த ஓராண்டு காலமாக தோட்டக் கலைத் துறை மூலமாக எவ்வளவு செடிகள் என்னென்ன வகையில் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) அதற்கு அரசு வழங்கிய மானியம் எவ்வளவு?